தத்துவநெறியில் திருமூலர் திருமந்திரமும் தாயுமானவரின் பாடல்களும்

ஆய்வாளர்

திருமதி மா.மஞ்சுளா

19PHTMF003

ஆய்வுநெறியாளர்

முனைவர் க.கலாவதி, எம்.ஏ.,எம்.எட்.,எம்.பில்.,பி.எச்.டி.,

அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்

முனைவர் பட்ட ஆய்விற்குரிய **(Ph.D)** முன் வரைவு ஆய்வறிக்கை

தமிழ்த்துறை

அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்

கோயம்புத்தூர் - 641 043

மே - 2023

தத்துவநெறியில் திருமூலர் திருமந்திரமும் தாயுமானவரின் பாடல்களும்

இன்றைய தனிமனித வாழ்க்கை முறையானது இயந்திர மயமாகவும், கணினி மயமாகவும், ஊடகங்களுக்கு இடையேயும் ஊடுருவி அபார வளர்ச்சிப் பெற்று வருகின்றது. இத்தகைய வளர்ச்சி நல்லதொரு விளைவை முற்றிலும் ஏற்படுத்திவிட்டது என்று கூறி விடலாகாது. ஆடம்பர வாழ்வை அடைந்த மனிதனால் ஆன்மிக வாழ்வைப் பெற முடியவில்லை. ஆன்மிக ஒளி அகத்தே எழ வேண்டுமானால் தத்துவ ஞானிகளின் வழியை நாடவேண்டும். தத்துவக் கருத்துக்களைத் தமது அனுபவத்திலிருந்தும் தத்துவ ஞானிகளிடமிருந்தும் பெறப்பட்டது என இரு பொருண்மைகளில் பதிவிடலாம். மனிதன் தானே சிந்தித்துத் தன்னுடைய அனுபவத்தினால் கிடைக்கக்கூடிய அறிவினைக் கொண்டு வேண்டியதை அடைவதற்கு முன்பே அவனுடைய ஆயுட்காலம் முடிவடைந்து விடும். அதனால் காலத்தை வீணடிக்காமல் பயனை எளிதல் அடைவதற்குத் தத்துவ ஞானிகளின் நூல்கள் பேருதவிப் புரிகின்றன. மானுட வாழ்வினை மெருகேற்றவும் வளத்தினைப் பெருக்கவும் தத்துவங்கள் வழிகோலுகின்றன. திருமூலப் பெருமானும் தாயுமான சுவாமிகளும் அறிவுறுத்துகின்ற தத்துவக் கருத்துக்களை உள்ளார்ந்து உணருகின்ற மனிதர்களின் மனமும் குணமும் பக்குவப்பட்டு நன்னெறியில் செல்வதற்கான வழிகள் மேலோங்கி இறைவனின் திருவடியை எளிதில் பற்றும் பெறும்பேறு கிட்டும் எனத் தத்துவ ஞானிகள் கூறுகின்றனர்.

திருமூலர் மற்றும் தாயுமானவர் குறிப்பிடும் தொண்ணூற்றாறு தத்துவங்கள் ஆன்மாக்களுக்குத் தொண்ணூற்றாறு ஒளி வீசும் விளக்குகளைப் போன்றதாகும். இவ்விளக்குகள் என்று ஒளி குன்றுகின்றதோ அல்லது குளிர்கின்றதோ அன்றுதான் ஆன்மாவிற்கு வெளிச்சம் பிறக்கும். தத்துவப் படிநிலைகளுக்கு ஏற்ப இவ்விளக்குகள் ஒவ்வொன்றாக ஒளி குன்றும் தருணத்தில் ஆறு ஆதாரங்களாகிய சக்கரங்கள் கீழிருந்து மேலெழுந்து பேரின்பம் பெற வாய்ப்பினை ஏற்படுத்தும். விளக்குகள் எரியும் போதோ அல்லது தூண்டப்படும் போதோ சக்கரங்கள் கீழ்நோக்கிச் சென்று சிற்றின்ப ஆசையால் சீர்கெட்டு அழியும். அனைத்து விளக்குகளும் அணைக்கப்பட்டு ஆன்மா எனும் ஒரு விளக்கு மட்டும் பிரகாசிக்க மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை ஆகிய ஆறு ஆதாரங்களையும் கடக்கும் பேறு கிடைக்கும் என்பதே தத்துவச் சான்றோர்கள் கூறும் பேருண்மையாகும்.

ஆய்வுத் தலைப்பு

தத்துவநெறியில் திருமூலர் திருமந்திரமும் தாயுமானவர் பாடல்களும் என்பது ஆய்வுத் தலைப்பாகும்.

ஆய்வு நோக்கம்

திருமூலரின் திருமந்திரத்தில் அமைந்துள்ள தத்துவக் கருத்துக்களைத் தாயுமானவரின் தத்துவக் கருத்துக்களோடு ஒப்புமைப்படுத்தி ஆய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

ஆய்வு எல்லை

திருமூலரின் திருமந்திரத்தில் அமைந்துள்ள ஒன்பது தந்திரங்களும் தாயுமான சுவாமிகளின் திருப்பாடல் திரட்டு என்னும் நூலில் அமைந்துள்ள பரசிவ வணக்கம் முதலாக ஆனந்த களிப்பு ஈராக ஐம்பத்தாறு தலைப்புகளில் அமைந்துள்ள பாடல்கள் மட்டுமே ஆய்வு எல்லையாக அமைந்துள்ளன.

ஆய்வு ஆதாரங்கள்

திருமந்திரமும் தாயுமானவர் பாடல்களும் முதன்மை ஆதாரங்களாக அமைகின்றன. தொண்ணூற்றாறு தத்துவங்கள் தொடர்பான இலக்கண நூல்கள், சங்க இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள், சித்தர் பாடல்கள், திறனாய்வு நூல்கள், ஆய்வேடுகள், ஆய்வுக் கட்டுரைகள், கலைக்களஞ்சியங்கள், அகராதிகள் போன்றவை இவ்வாய்விற்குத் துணைமை ஆதாரங்களாக அமைகின்றன.

ஆய்வின் கருதுகோள்

மானுடர்களின் மனதையும், உடலையும் ஒருநிலைப்படுத்தி சிவபதம் அடைவதற்குச் சான்றோர்களின் தத்துவக் கருத்துக்களும் வழிகாட்டுதலும் உதவுகின்றன. அதனால் ஆறு ஆதாரங்களின் வழி ஐந்து அவத்தைகளைக் கடப்பதற்குத் திருமூலர், தாயுமானவரின் தத்துவக் கருத்துக்கள் மானுடர்களுக்கு எவ்வாறு பயன்படுகின்றது என்னும் கருதுகோளின் அடிப்படையில் இவ்வாய்வு அமைகின்றது.

ஆய்வு அணுகுமுறை

ஆய்வுத் தொடர்பான கருத்துக்களை விளக்குமிடத்து விளக்கமுறை அணுகுமுறையும், தத்துவங்களை ஆராயுமிடத்து தத்துவவியல் அணுகுமுறையும், இருநூல்களையும் ஒப்புமைப்படுத்திக் கூறுமிடத்து ஒப்பியல் அணுகுமுறையும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஆய்வின் பயன்

திருமூலர் மற்றும் தாயுமானவரின் தத்துவக் கருத்துக்களை ஆய்வு செய்வதன் மூலம் மானுடர்கள் தங்களை உணர்ந்து, தத்துவக் கருத்துக்களை அறிந்து, தீக்குணங்களைக் களைந்து அதன் வழி ஆன்மத் தரிசனம் பெற்று சிறப்புடன் வாழ்வதற்கு இவ்வாய்வு மிகவும் பயனுள்ளதாக அமையும்.

ஆய்வு முன்னோடிகள்

ஆய்வு நூல்கள்

1. பண்பாட்டுப் பார்வையில் திருமந்திரம் - முனைவர் சுடலி தியாகராசன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை. முதற் பதிப்பு - 2009

2. தாயுமானவர், பேரா. நா. சுப்புரெட்டியார் - கலைஞன் பதிப்பகம், 19 கண்ணதாசன் சாலை, தியாகராய நகர், சென்னை. முதற் பதிப்பு 2001

முனைவர் பட்ட ஆய்வேடுகள்

1. **திருமந்திரத்தில் உயிர்க் கோட்பாடு** - வே.சங்கர் - நெறியாளர் அ. அறிவுநம்பி, பாண்டிச்சேரி பல்கலைக்கழகம். ஆண்டு - 2006

2. **தாயுமானவர் பாடல்கள் - ஓர் ஆய்வு** - சி.ஆர் சகுந்தலா - நெறியாளர் கா.மீனாட்சிசுந்தரம், சென்னைப் பல்கலைக்கழகம். ஆண்டு - 1983

ஆய்வுப் பகுப்பு முறை

தத்துவநெறியில் திருமூலர் திருமந்திரமும் தாயுமானவரின் பாடல்களும் என்னும் இவ்வாய்வு முன்னுரை முடிவுரை நீங்கலாக,

இயல் ஒன்று : தத்துவங்கள் - அறிமுகம்

இயல் இரண்டு : ஆன்மிகத் தத்துவங்கள்

இயல் மூன்று : மானுடமும் தொண்ணூற்றாறு தத்துவங்களும்

இயல் நான்கு : தத்துவங்களின் வழி சமுதாயப் பயன்பாடு

என நான்கு இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. ஆய்வேட்டின் இறுதியில் ஆய்விற்குத் துணைநின்ற நூல்களின் பட்டியல் இடம்பெற்றுள்ளன. தத்துவ ஞானிகளான திருமூலர் மற்றும் தாயுமானவரின் ஒன்றுபடும் தத்துவக் கருத்துக்களும், தத்துவத்துறை சார்ந்த கலைச்சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களும் பட்டியலிட்டு பின்னிணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

இயல் ஒன்று : தத்துவங்கள் - அறிமுகம்

மானுட வாழ்வின் இயற்கை நிகழ்வுகளான இளமை, பிணி, மூப்பு இவற்றை அடைவதற்கான காரணங்கள் குறித்தும் மனமானது தொடர்ந்து அதிர்வலைகளை ஏற்படுத்திக் கொண்டே இருக்கும் தொடர்பு குறித்தும் உயிரின் அளவு, தன்மை, நிலைபெறும் இடம் மற்றும் இறுதிப் பயணம் குறித்தும் ஆராய்ந்து தெளியும் அறிவே மெய்ஞ்ஞான அறிவு அல்லது தத்துவ அறிவு என்பது சான்றோர்களின் துணிவாகும். இத்தகைய மெய்ஞ்ஞான அறிவின் துணையோடு மனிதன் தனது அனுபவத்தின் மூலம் உணர்ந்து கொள்ளும் அறிவே தத்துவமாகும். தத்துவம் என்பது மனிதனுடைய பல்வேறுபட்ட அனுபவங்களின் மீதான பிரதிபலிப்பு என்று பிரிட்டாணிகா கலைக்களஞ்சியம் தெளிவுப்படுத்துகிறது. சமயம் என்பது இறைக்கொள்கை என்றும் தத்துவம் என்பது அதனொடு தொடர்புடைய ஆன்ம

அனுபவத்தைப் பெறும் வழியாகும் என்பதும் சான்றோர்களின் திருவாக்காகும். தத்துவ ஆராய்ச்சி என்பது பொருள்களின் உண்மை நிலையினை அளவை முறையில் ஆய்ந்துணரும் அறிவேயாகும்.

தத்துவங்களின் தோற்றமும் முறையும்

தேகம், அந்தக்கரணம், பிராணன் போன்றவற்றிலிருந்து தன்னைப் பிரித்துப் பார்ப்பவன் ஞானி ஆகிறான். அனைத்து நாடுகளிலும் உள்ள தத்துவ ஞானிகள் முன்வைக்கின்ற தத்துவக் கருத்துக்கள் நாட்டிற்கு நாடு பண்பாடுகளின் அடிப்படையில் வேறுபடுகின்றன. மெய்ப்பொருளியலில் கிரேக்கமே முன்னணியில் இருப்பதாக உலக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஆனால் கிரேக்கத்தில் தத்துவம் துளிர்க்கத் தொடங்கிய கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலேயே இந்தியா தத்துவத்துறையில் செழித்தோங்கி வளர்ந்து நிலை பெற்றிருந்தது என்று டாக்டர் இராதாகிருஷ்ணன் உறுதிப்படுத்தியுள்ளார். மனிதர்களுக்கிடையே அமைந்துள்ள காதல், காமம், அன்பு, நட்பு, பிரிவு, பொறாமை போன்றவற்றை ஆராய்வது **கருப்பொருள் ஆராய்ச்சியாகும்**. இத்தகைய ஆய்விற்கான முடிவானது சிற்றின்பத்தை எட்டுவதாகும். மனிதர்களின் உடல், ஆன்மா, பிறவிச் சுழற்சி, துறவு, தவம், யோகம், முக்தி போன்றவற்றை ஆராயும் முறையினைப் **பருப்பொருள் ஆராய்ச்சி, மெய்ப்பொருள் ஆராய்ச்சி** என்பர் தத்துவஞானிகள். இத்தகைய ஆய்வின் முடிவானது பேரின்பத்தை எட்டுவதாகும்.

இந்தியத் தத்துவஞான ஆராய்ச்சி வேதங்களின் அடிப்படையில் தோன்றியது என்னும் கோட்பாட்டின் அடிப்படையில், வேதத்தினை ஏற்றுக்கொண்டவை **வைதிகம் எனவும்,** வேத்தினை ஏற்றுக்கொள்ளாதவை **அவைதிகம்** என்னும் பாகுபாட்டின் கீழ் பிரிக்கப்படுகின்றது. **சாங்கியம், யோகம், நியாயம், வைசேடிகம், பூர்வமீமாம்சம், உத்ரமீமாம்சம்** என்பன **வைதிகத் தத்துவங்களாகும்**. அவைதீகத் தத்துவங்கள் நாத்திக மதங்கள், மெய்யியல் மரபுகள், சிந்தனை மரபுகள் என்ற பெயர்களில் அழைக்கப்படுகின்றன. **உலகாயதம்** (பூதவாதம், சாருவகம்), **ஆசிவகம், நால்வகைப் பௌத்தம்** (சௌத்திராந்திகம், வைபாடிகம் ஆகிய ஈனயானப்பிரிவுகள், மாத்தியமிகம், யோகாசாரம் ஆகிய மகாயானப் பிரிவுகள்)**, மூவகைச் சமணம்** (திகம்பரம், சுவேதாம்பரம், யாபனியம்) ஆகிய நான்கும் **அவைதிகத்** தத்துவத்தினுள் அடங்கும். வேத வழிப்படுதலை வைதிகம் எனவும், ஆகம வழிப்படுதலைச் சைவம் எனவும் கொண்டு சைவ சமயத்தை வைதிகச் சைவம் என்று சோ.ந. கந்தசாமி அவர்கள் விளக்கம் தருகின்றார். இவற்றுள் சைவ சித்தாந்தமானது வேதத்தினையும் ஆகமத்தினையும் ஏற்றுக் கொண்ட வைதிக சமயமாகும்.

தத்துவவாதிகளுக்கு இடையேயான சொற்போரும், கருத்துப்போரும் தத்துவத் துறையில் மாற்றங்கள் நிகழக் காரணமாக அமைகின்றன. ஒவ்வொரு தத்துவஞானியும் முந்தையத் தத்துவஞானிகளின் கருத்தோட்டங்களைப் பகுத்தும் தொகுத்தும் புதியத் தத்துவங்களைப் படைக்கின்றனர். இவ்வகையில் தத்தவப் பள்ளிகளுக்கிடையே நிலவும் வேற்றுமைகளுக்கு **வேதமும் ஆகமமும்** மிக முக்கியக் காரணமாக அமைகின்றன. வேதங்களின் உயிரோட்டமாக அமைந்துள்ள மகா வாக்கியங்களை ஏற்றுக்கொண்டும், ஆகமங்களை உடன்கொண்டும் அமைக்கப் பெற்ற அனுபவக் கருவூலங்களின் தொகையாக விளங்குவதே சைவசிந்தாந்தப் பெருநெறியாகும்.

உலகாயதம் முதல் மீமாம்சம் வரையுள்ள தத்துவங்களைச் சைவசித்தாந்த தத்துவர்களான திருமூலர், தாயுமானவர் தத்துவங்களோடு ஒப்பிட்டு காண்பதற்குரிய சாத்தியக்கூறுகள் அமைந்துள்ளன. இருநூல்கலும் **வேத ஆகமங்களை ஏற்றுக்கொண்டவை, வேதாந்த சித்தாந்த சமரசம் கொண்டவை, வைதிக அடிப்படையில் அமைந்த நூல்கள்** என்பதைக் கருத்தில் கொண்டு ஆராயப்பட்டுள்ளது. சைவசித்தாந்தத் தத்துவமானது இந்தியத் தத்துவத்திற்குள் ஒரு பிரிவாக உள்ளது. **உடல் கொள்கை, ஆன்மக் கொள்கை, இறைகொள்கை, முக்திக் கொள்கை** போன்ற மறைபொருள் உண்மைகளை வேதம் முதல் சைவசித்தாந்தம் வரை உள்ள தத்துவங்களோடு எவ்வாறு ஒன்றியும் உறழ்ந்தும் காணப்படுகின்றது என்பதை ஆராய்ந்தறிய முயலும் போது ஏனைய தத்துவங்களிலிருந்து **சைவசித்தாந்தம் தனித்து நிற்பதை** அறிய ஏதுவாகுகின்றது.

அளவையியல் முறை

பிற மதக் கொள்கைகளை மறுத்துரைக்கவும் தங்கள் கொள்கைகளை நிலைநாட்டவும் அளவை முறைகள் பயன்படுத்தப்பட்டன. **காட்சி, கருதல், உவமம், உரை, அருத்தாபத்தி, இயல்பு, ஐதிகம், அபாவம், மீட்சி, உள்ளநெறி** என்னும் பத்து அளவைகளை மணிமேகலை காப்பியம் குறிப்பிட்டுள்ளது. இதன் வழி அளவை முறைகளைப் பயன்படுத்தி சமயங்கள் தத்தம் கொள்கைகளை நிலைநாட்டின என்பதனை அறிய முடிகின்றது. சைவசித்தாந்தத் தத்துவமானது **காண்டல், கருதல், உரை(ஆகமம்)** என்னும் அளவைகளைக் கொண்டு தத்துவக் கொள்கைகளை நிலைநிறுத்துகின்றது.

வேதம் முதல் சைவ சித்தாந்தம் வரையுள்ள தத்துவப் பள்ளிகள்

மனித உடலில் உயிர் எங்குள்ளது என்பதும், மனிதன் இறந்தபின் உயிரானது எங்கு செல்கிறது என்பதும் மனிதர்களிடத்தில் எழும் வினாவாகும். இத்தகைய வினாவிற்குத் தத்துவச் சான்றோர்களே தீர்வும் தெளிவும் தந்துள்ளனர் என்றால் அது மிகையாகாது. ஒரு மதம் ஆன்மாவிற்கென்று வகுத்துள்ள இலக்கணத்தைக் கொண்டு அம்மதத்தின் முக்திக் கொள்கையை நிறுவிடலாம். வேதம், உபநிடதம், உலகாயதம், நியாயம், மீமாம்சம் ஆகிய தத்துவப் பள்ளிகள் முன்வைக்கின்ற இறைகொள்கை, ஆன்மக் கொள்கை, முக்திக் கொள்கை, ஐம்பூதங்கள் குறித்த கொள்கை, வினைக் கொள்கை ஆகியவற்றின் தத்துவ முடிவுகள் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது. வேதம் மற்றும் ஆகமங்கள் சிவபெருமானால் படைக்கப்பட்ட நூல்கள் என்பது சைவசமய அருளார்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். இவ்வகையில் திருமூலரும், தாயுமானவரும் விதி விலக்கானவர்கள் அல்லர் என்பதனை,

> **வேதமோடு ஆகமம் மெய்யாம் இறைவன்நூல் (திருமந் : 2397 : 1)**
> **வேதமுதல் ஆனநல் ஆகமத் தன்மையை**
> **விளக்கும்உள் கண்இலார்க்கும்,**
> **மிக்கநின் மகிமையைக் கேளாத செவிடர்க்கும் (தாயு : 580 : 9 - 11)**

என்ற பாடலடிகள் வழி அறிய முடிகின்றது.

சமய அடிப்படையில் தத்துவங்கள்

சமயம் என்ற சொல்லுக்கு ஒழுங்குபடுத்திய நெறி அல்லது பக்குவப்பட்டது என்று பொருள். தானியமாகவும், பருப்பாகவும் உள்ளவற்றை உண்ணும் நிலைக்குப் பக்குவப்படுத்தினால் **சமையல்** என்று கூறுவது போல சமுதாய வாழ்வைப் பக்குவமான நெறியில் கொண்டு செல்வது சமயமாகும். மனிதன் இறைவனை அடைய அனைத்து சமயங்களும் தடைகளைக் கடக்க வலியுறுத்துகின்றன.

- உயிர்கள் மீண்டும் பிறக்கக் காரணம் **ஆசையே** என்கிறது **சமணமும் பௌத்தமும்.**
- உயிர்கள் மீண்டும் பிறக்கக் காரணம் **மல பந்தமே (ஆணவம், கன்மம், மாயை)** என்கிறது **சைவம்.**
- உயிர்கள் மீண்டும் பிறக்கக் காரணம் **பாசப் பற்றே** என்கிறது **வைணவம்**
- உயிர்கள் மீண்டும் பிறக்கக் காரணம் **பாவமே** என்கிறது **கிறித்துவமும் இசுலாமியமும்**.

இயல் இரண்டு : ஆன்மிகத் தத்துவங்கள்

ஆன்மிகம் என்ற சொல்லாடலை இந்நூற்றாண்டு மக்கள் கையாளும் விதமும் கைகொள்ளும் போக்கும் புதுமையாக உள்ளது. அதாவது நரைத்த தலையும், தள்ளாடும் வயதும்தான் ஆன்மிகத்தில் நாட்டம் ஏற்பட உகந்த காலம் என்பது மக்களின் திண்ணமாக உள்ளது. நலமான வாழ்க்கை வாழ்வதற்கு ஏற்ற வயது எதுவோ அதுவே ஆன்மிகத்திற்கும் ஏற்ற வயது என்ற நிதானத்தினை உணர்வதற்குச் சொற்ப காலங்கள் தேவைப்படுகிறது. மனிதனின் அறிவு, சொல், செயல் ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் பயிற்சியே ஆன்மிகமாகும். உடலினுள் குடிகொண்டிருக்கும் ஆன்மா பிறவி, பிணி, வினை, மரணம் என்ற இன்னல்களிலிருந்து விடுபட, மனிதன் தன்னை உணர்ந்து, இறைவனோடு சேரும் வழியை அறிந்து தன்னை நெறிப்படுத்தி நிற்பதே ஆன்மிகமாகும். இன்னல்களால் கட்டுண்ட மனிதப் பிறவிக்கு முற்றுப்புள்ளி வைக்க பிறப்பு இறப்பு இல்லாத சிவனாலே முடியும் என்பது சைவ அருளாளர்களின் கூற்றாகும். சிவ சிந்தனையில் ஆழ்ந்துள்ளோர்க்கு சைவ சமயம் தொடர்பான அனைத்துமே வேதமாகத் தெரியும். சிவனின் வரலாறு, புராணம், ஆடை, அணிகலன்கள் போன்றவற்றில் அதிதீத ஈடுபாடு தோன்றுவது அடியார்களின் இயல்பாகும். மனிதனின் பிறவிச் சுழற்சி நீங்குவதற்கு அவனிடமுள்ள சிற்றின்ப இச்சைகளைக் களைந்து மனம், மொழி, மெய்களால் மௌனம் காத்து, அருளாளர்களின் அருட்புலம்பல்களை உள்வாங்கி அதன் மூலம் தனக்குள்ளே ஆன்மத் தாகத்தை ஏற்படுத்தி ஆன்மாவினை விடுவிக்க முயல வேண்டும் என்று திருமூலர் மற்றும் தாயுமானவர் குறிப்பிடுவதாக,

மோனம் கைவந்தோர்க்கு முத்தியும் கைகூடும்

மோனம் கைவந்தோர்க்குச் சித்தியும் முன்னிற்கும் (திருமந் : 1611 :)

முக்திக்கு வித்து மோனக் கரும்புவழி

தித்தித் திடவிளைந்த தேனே பராபரமே (தாயு : 385 : 2)

இப்பாடலடிகள் அமைகின்றன.

இயல் மூன்று : மானுடமும் தொண்ணூற்றாறு தத்துவங்களும்

ஆறறிவு கொண்ட மனித குலம் முழுவதையும் மானுடம் என்ற சொல்லால் குறிக்கலாம். ஓரறிவு முதல் ஐந்தறிவு வரை உள்ள பறவைகள், விலங்குகள் போன்றவற்றைத் திருத்தவும், சீரமைக்கவும், கையாளவும் இலக்கியங்களோ, தத்துவ ஞானிகளோ முற்படுவதில்லை. மனிதனை மனிதனாக்கவே இத்தனை செயல்பாடுகளும், போராட்டங்களும் நடைபெறுகின்றன எனலாம். மானுட உடலானது நிலையற்றது என்பதை உணர்ந்து விழுமியக் கருத்துக்களை ஏற்க மனம் திரும்பும் நிலையில் இறைதாகம் ஏற்படும். இறைதாகம் ஏற்பட்ட நிலையில் உடலும் உள்ளமும் தெளிவாகும்.

தத்துவத்துறை பற்றிய அறிவை வளர்க்க மானுடர்களுக்குத் தடையாக இருப்பவை அவை சார்ந்த கலைச்சொற்கள் எனலாம். அறிவியல் துறையில் அறிவை பெருக்கிக் கொள்ள விரும்புபவர்கள் அத்துறை சார்ந்த கலைச்சொற்களான ஆல்பா, பீட்டா, காமா போன்றவற்றை முதலில் தெளிகின்றனர். தத்துவத்துறை சார்ந்த கலைச்சொற்களான **சத்து**, **சித்து, அசித்து, சதசித்து, சாக்கிரம், சூனிய சம்பாஷனை, தூலம், சூக்குமம், அதிசூக்குமம், அவத்தை, துரியம், கேவலம், சகலம், சுழுத்தி, துரியாதீதம்** என பலவற்றைக் கூறலாம். கலைச்சொற்கள் இல்லாத துறையானது வளரவும் சிறக்கவும் முடியாது என்பதற்கு இத்துறை இன்றளவில் பெற்ற வளர்ச்சியைச் சான்றாகக் குறிப்பிடலாம். திருமூலரும், தாயுமானவரும் தொண்ணூற்றாறு தத்துவங்கள் பற்றி தனிதனியே விரித்துக் கூறியிருப்பது சிறப்பிற்குரிய ஒன்றாகும். இவ்விருவரும் ஒவ்வொரு தத்துவத்திற்குரிய **தன்மை, உடல் தொடர்பு, உயிர் தொடர்பு, ஆற்றல், குணம், பின்விளைவு, கட்டுப்படுத்தும் திறன், வெளிப்படும் விதம், வகைமை** போன்றவற்றை தத்தமது பாடல்கள் வாயிலாகச் செதுக்கித் தந்துள்ளனர்.

மானுடமும் தொண்ணூற்றாறு தத்துவங்களும்

- ❖ சீவன்கள் சிவனாக வேண்டும் என்ற உயரிய குறிக்கோளின் அடிப்படையே **சிவ தத்துவங்களைப்** பற்றுக் கோடாக ஏற்றுக் கொள்ளுதலாகும்.
- ❖ மானுடர்களின் இம்மை, மறுமை, உம்மை (முற்பிறவி)என்னும் மும்மையில் செய்த, செய்கின்ற, செய்யும் வினையின் அளவிற்கு ஏற்ப இன்ப துன்பங்களை நுகரச் செய்வதற்கு **கால தத்துவம்** உதவுகின்றது. மானுடர்களுக்கு அனுபவ அறிவினைத் தருவது **கால தத்துவமாகும்.**
- ❖ எந்த உயிரினத்திற்கும் தீங்கு விளைவிக்காது, இப்படித்தான் வாழவேண்டும் என்று மானுடர்களுக்கு வழிகாட்டுவது **நியதி தத்துவமாகும்.**
- ❖ ஆணவ மலத்தில் கட்டுண்ட உயிர்களின் செயலாற்றலை வெளிப்படுத்த முன்நிற்பது **கலை தத்துவமாகும்.**
- ❖ மானுடர்களின் அறிவாற்றலை முறைப்படுத்தவும், சீரமைக்கவும் **வித்தை தத்துவம்** ஏதுவாக அமைகின்றது.
- ❖ உயிர்களின் விருப்ப ஆற்றலைத் தூண்டி வெளிக்கொணர **அராக தத்துவம்** செயல்படுகின்றது.

- ❖ மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் **அந்தக்கரண தத்துவத்தாலே** ஏனையத் தத்துவங்கள் தொழிலாற்றுகின்றன.
- ❖ **சாத்வீகம், தாமசம், இராசதம்** ஆகிய மூன்று குணத் தத்துவங்களே மனித வாழ்வினை நெறிப்படுத்தும் நிலைக்களங்களாக அமைகின்றன.
- ❖ **பொறி, புலன்** குறித்த தத்துவங்களே மனிதனுக்குப் பிறவிச் சுமையை மீண்டும் சுமக்க வைக்கிறது.
- ❖ நரை, திரை, மூப்பின்றி வாழவும், நினைத்ததை ஆள நினைக்கும் மனதினைக் கட்டுப்படுத்தவும் **வாயு தத்துவங்கள்** பேருதவிப்புரிகின்றன.
- ❖ சீவனும் சிவனும் இரண்டறக் கலப்பதற்குத் தடையாக இருப்பது **மாமலத் தத்துவமாகும். ஆகாமியம் பிராரப்த்தம், சஞ்சிதம்** ஆகிய வினைத் தத்துவங்களின் கூறுபாட்டாலே மானுடர்களுக்கு குரு, நண்பன், மனைவி, மக்கள் மற்றும் இன்ப துன்பங்கள் தீர்மானிக்கப்படுகின்றன என்பன மானுடர்களுக்கும் தொண்ணூற்றாறு தத்துவங்களுக்கும் இடையேயான தொடர்புகளாகும்.

இலக்கணத்தை இலக்கியத்தோடு இணைத்துச் சுவைக்கும் போது சுவை மேலோங்குவது போல, தத்துவக் கருத்துக்களை வாழ்வியலோடு இணைக்கும் போதுதான் அதனுள் புதைந்துள்ள பொருட்சுவையும், புரிதல் தன்மையும் பன்மடங்கு பெருகும். அவ்வகையில் தெய்வநெறிச் சான்றோர்களான திருமூலரும், தாயுமானவரும் தொண்ணூற்றாறு தத்துவக் கருத்துக்களைக் கற்றறிந்த சான்றோர்கள் முதல் பாமர மக்கள் வரை அனைவரிடமும் கொண்டு செல்லும் நோக்கத்தோடு இயற்கை, விலங்குகள், தாவரங்கள் போன்றவற்றைக் உவமையாக்கியும் உருவகப்படுத்தியும் நன்னெறிகளைப் போதித்திருக்கும் பாங்கு போற்றுதலுக்குரியதாகும் அவ்வகையில் இரு அருளாளர்களும் உவமை மற்றும் உருவகங்களைப் பயன்படுத்திக் கூறிய தத்துவக் கருத்துக்கள் இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளது. ஆன்மா தன்னை அறிந்து பின் இறைவனை அடைய பஞ்சபூதங்கள், தன்மாத்திரையாகிய பொறிகள், புலன்கள், அந்தக்கரணங்கள், மாயைகள் ஆகியவற்றிலிருந்து விடுபட வேண்டும். அதாவது ஒன்றினுள் ஒன்று ஒடுங்க இறுதியில் ஆன்மாவானது இறைமடியில் அடங்கும். பூதங்கள் புலன்களில் ஒடுங்கும், புலன்கள் அந்தக்கரணங்களில் ஒடுங்கும், அந்தக்கரணங்கள் மாயையில் ஒடுங்கும், மாயை ஆன்மாவில் ஒடுங்கும், ஆன்மா சிவத்தில் ஒடுங்கும். சுத்த மாயைத் தத்துவங்களிலிருந்து சிவ தத்துவங்கள் ஐந்தும், அசுத்த மாயையிலிருந்து வித்யா தத்துவங்கள் ஏழும், பிரகிருதி மாயையிலிருந்து ஆன்மத் தத்துவங்கள் இருபத்தினான்கும் தோன்றி இறைமடியை அடைய வழி செய்கின்றன.

சிவ தத்துவங்கள் வழி வாழ்வியல்

சைவ சித்தாந்தத்தின் தனிப்பெறும் கொள்கைகளுள் ஒன்று இறைவன் தாமே வந்து உயிர்களுக்கு அருள் புரிந்து ஆட்கொள்வது என்பதாகும். உயிர்கள் மீது கருணைகொண்டுள்ள இறையானவன் மெல்ல கீழிறங்கி அருள் புரியும் நிலையே சிவ தத்துவமாகும். **நாதம் விந்து, சதாசிவம், மகேசுவரம், சுத்தவித்தை** என்னும் ஐந்து சிவ தத்துவங்களும் நுண்ணொலி, மிடற்றொலி,

நினைவொலி, உட்செவியொலி, வெளிச்செவியொலி என்னும் வாக்குத் தத்துவத்தின் உதவியால் ஆன்மாக்களுக்கு உலகியல் பற்றினை விடுவிக்க இறைவன் கருணைபுரிவான்.

வித்யா தத்துவங்கள் வழி வாழ்வியல்

அசுத்த மாயை தத்துவத்தினுள் **காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை** என்னும் ஏழு வித்யா தத்துவங்கள் தோன்றும். இத்தத்துவம் மானுடர்களை மயங்கச் செய்வதால் இதற்கு மோகினித் தத்துவம் என்ற மற்றொரு பெயரும் உண்டு. அராகம் ஆன்மாவின் இச்சா சக்தியையும், வித்தை ஞான சக்தியையும், கலை கிரியா சக்தியையும் விளக்கி ஆன்மாவை நுகர்ச்சியில் ஈடுபடச் செய்யும். நியதித் தத்துவம் இதனையே நுகர்க என வரையறுத்து நிறுத்தும். கால தத்துவம் இந்த நுகர்சியை இத்தனைக் காலம் நுகர்க என எல்லைப்படுத்தும். இவ்வைந்து கருவிகளும் ஆன்மாவோடு எப்பொழுதும் நீங்காமல் சட்டை போல ஒன்றாய் ஒட்டியேயிருக்கும் என்ற தன்மையால் இதற்குப் பஞ்ச கஞ்சுகம் என்று பெயர். வித்யா தத்துவத்தில் மாயையில் அமைந்துள்ள ஆணவ மலத்தை மூல இருள் என்கின்றார் திருமூலர். மாயா மலமானது மானுடர்களை, நிலையில்லாதப் பொருட்களையும் நிலையானதாக எண்ண வைத்து மயக்கமடையச் செய்யும் இயல்பினை உடையதாகும். இம்மல பந்தத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளும் மானுடர்களே இம்மையை அறுப்பர். ஆணவ மலமானது உயிரின் அறிவை கீழ் நிலைக்குக் கொண்டு சென்று செயல்படுத்தும் என்கின்றனர் தத்துவச் சான்றோர்கள். இக்கருத்திற்கு தாயுமானவர்,

> **சொன்னதைச் சொல்லித் துடிக்கின்ற ஆணவப்பேய்க்கு**
> **இன்னல் வருவது எந்நாள் எந்தாய் பராபரமே (தாயு : 794)**

என எளியதொரு விளக்கம் தருகின்றார்.

ஆன்மத் தத்துவங்கள் வழி வாழ்வியல்

இறைவனுடன் தொடர்புடைய தத்துவங்களைச் சிவ தத்துவம் எனவும், கலையுடன் தொடர்புடைய தத்துவங்களை வித்யா தத்துவம் எனவும், ஆன்மா எனும் உயிரோடு தொடர்புடைய தத்துவங்களை ஆன்மத் தத்துவம் எனவும் வழங்கப்படுகிறது. ஆன்மத் தத்துவத்திற்கு **மான் தத்துவம்** என்ற மற்றொரு பெயரும் உண்டு. காட்டில் வேடர்கள் எழுப்பும் வாத்திய ஒலியை மான்கள் செவிமடுத்து மெய்மறந்து இருக்கும் வேளையில் அவற்றை வேட்டையாடுகின்றனர். அதுபோல ஆன்மாவும் தனக்கு பிணிக்கப்பட்ட பொறி, புலன்களில் மயங்கி நிலையில்லாதவற்றை நிலையானவை என எண்ணி வாழ்நாட்களை வீணாக்குகின்றது. ஆன்மத் தத்துவத்தில் ஆன்மாவிற்கு குணங்களின் பேராதிக்கம் நிறைவதால் அசுத்தத் தத்துவம் என்றும் அழைக்கப்படும். ஒரு பொருளைச் சுத்தப்படுத்துவதற்கு பல முறைகள் உள்ளன. பொன்னை உமி, கரி, நெருப்பு, காற்று போன்றவற்றின் துணைகொண்டு சுத்தப்படுத்தும் போது அதன் தரம் உயர்வது போல கருவி கரணங்களால் ஆன்மா வடிவமைக்கப்படுகின்றது. ஆன்மாக்களுக்கு மலமறைப்பு அகலுறும் போது பாசஞான(தளைப்பற்று) பசுஞானங்கள் விலகும். இத்தகைய விளைவுகளை ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, ஆன்ம விடுதலை என்னும் பெயர்களில் வழங்குவர்.

இயல் நான்கு : தத்துவங்கள் வழி சமுதாயப் பயன்பாடு

சமுதாய மேம்பாடு என்பது தனிமனித மேம்பாட்டைப் பொருத்தும் அமைகின்றது. ஒருவன் தன்னைத் தானே திருத்திக் கொள்ள முயலும் போது சமுதாயம் தானாகவே மாறும். தொண்ணூற்றாறு தத்துவங்கள் வாயிலாக தனி மனிதனுக்கு மட்டுமன்றி சமுதாயத்திற்கும் நேர்த்தியான பல பயன்பாடுகள் ஏற்படுகின்றன. உடலும் மனமும் சீராக இயங்கச் சிற்றின்பத்தில் கூட நெறிமுறைகளைப் போதிக்கும் சமயம் சைவ சமயமாகும். சைவ சமயமானது அருளுணர்வு, ஊனுணவு தவிர்த்தல், திருநீறு தரித்தல், ஆசை வாழ்வைக் கடிதல், உண்மையுரைத்தல், பொறுமை காத்தல், கொல்லாமை, விருந்தோம்பல், அருள் நூலோதுதல், துறவினைத் தூண்டுதல், தன்னடக்கம் பேணுதல், தானம் தர்மம் செய்தல், சகிப்புத்தன்மை பெறுதல் போன்ற எண்ணற்ற ஒழுகலாறுகளைப் போதிக்கின்றது. தனிமனிதனுக்கென அமைக்கப்பட்ட ஒழுகலாறுகள் ஏராளமாக இருப்பினும் மனித வாழ்க்கையைத் திசைதிருப்பி தடுமாற்றம் அடையும் குணநலன்களைச் சீர்படுத்தும் விதமாக, குறிப்பிட்ட ஒழுகலாறுகளாக **தன்னை அறியும் ஞானம் பெறல், அன்பின் வழி இறைவனை அணுகல், பாலியல் ஒழுக்கத்தில் மடைமாற்றம், சமய நல்லிணக்கம் பெறல், பிணியும் தீர்வும்** போன்ற முக்கிய ஒழுகலாறுகளை அறிவியலுடன் இணைத்து விளக்கம் அளிப்பதில் தத்துவ சான்றோர்களுக்கு இணை தத்துவச் சான்றோர்களே எனலாம். தன்னை அறிதல் என்பது மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை, துரியம், துரியாதீதம் என ஆதாரங்களைத் தத்துவப் படிநிலைகளைக் கொண்டு அறிந்துணர்ந்து கடந்து நிற்பதேதாகும். தன்னை அறிய முற்படுவோனுக்கு நன்மைகள் கிடைக்கும் என்பதைத் திருமூலரும் தாயுமானவரும்,

தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை

தன்னை அறியாமல் தன்னை கெடுகின்றான்

தன்னை அறியும் அறிவை அறிந்தபின்

தன்னை அர்ச்சிக்கத் தான் இருந்தானே (திருமந் : 2355)

தன்னை அறிய தனது அருளாள் தான் உணர்த்தும் (தாயு : 569 : 1)

என்ற பாடலடிகள் வழி விளக்கம் தருகின்றனர். ஒருவன் உயர்வான ஒழுக்கங்களைக் கடைப்பிடித்து வாழ்வானேயானால் அவன் அகத்தே ஆன்மிக ஒளி வெளிப்பட்டு **இறைவன் வாசம் செய்வான்** என்பதே தெய்வச் சான்றோர்களின் கொள்கையாகும். ஏதேனும் ஒன்றின் பயன்பாடும் நற்பயனும் கிடைக்கப் பெறுகிறது என்றால் அதனைப் பின்பற்றி, அதனில் நிலைபெற்று இருப்பதும் மனிதனின் இயல்பாகும். சமயம் சார்ந்த பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் மனிதனை நல்வழியில் செம்மைப்படுத்தும் என்பதால் அத்தகைய விழுமியங்களைக் கடைப்பிடித்து ஒழுகுவது சாலச்சிறந்த பண்பாகும் என்றதன் அடிப்படையில் இவ்வியல் அமைந்துள்ளது.

முடிவுரை

- மனிதன் இயல்பு வாழ்க்கையை வெறுத்து ஆடம்பர வாழ்க்கைக்கு தேவையானவற்றை நாடுவதன் மூலம் போட்டியும், சுயநலமும் பெருகிவிட்டது. ஆடம்பர வாழ்க்கைக்குத் தேவையானவற்றைப் பெறுவதற்கு அறவழியில் செல்வதை விடுத்து, பொருள்களின் மேலுள்ள மோகத்தினால் பொய், வஞ்சகம், சூது, அடுத்தவா்களைக் கெடுத்தல், வீண்பழி, களவு போன்ற தீக்குணங்களில் பதிந்து குறிக்கோளற்ற வாழ்க்கையை அடைகின்றான். மனிதன் பண்பட சான்றோா்கள் அறிவுறுத்துகின்ற அடிப்படை ஒழுகலாறுகளையும், தத்துவப் படிநிலைகளையும் கடப்பதன் மூலம் அமைதியான வாழ்க்கைச் சூழலைப் பெற முடியும்.
- தன் வாழ்க்கைப் பயணத்தில் நிகழ்கின்ற இன்ப துன்ப நிகழ்வுகளை மூன்றாவது மனிதனாகத் தள்ளி நின்று கவனிக்கும் மனப் பக்குவத்தை தத்துவ ஞானம் தருகின்றது.
- உயிா் ஆற்றலை சீரமைக்கும் உணவினை ஏற்பதும், பாவ கன்மங்களைக் கூட்டும் உணவினைத் தவிா்ப்பதும் நன்மையைத் தரும்.
- உடலில் விரயமாகின்ற உயிா் ஆற்றலை மீண்டும் மறுசுழற்சி செய்யும் கல்வி அறிவைப் பெற வேண்டும்.
- சித்தத்தை எந்நிலையிலும் விழிப்புடன் வைத்து காரண காரியங்களில் ஈடுபட வேண்டும்.
- மனதை இறந்த காலத்திற்கோ, எதிா் காலத்திற்கோ இழுத்துச் சென்று பயனற்ற எண்ணப் போக்குகளை எண்ணாமல் நிகழ்காலத்தில் மனதை நிலைநிறுத்தி உயிா் ஆற்றலை விரயம் ஆகாமல் சேமிக்கும் வழியினை அமைத்துக் கொள்ள வேண்டும்.
- இக்காலக்கட்டத்தில் மனிதா்களிடையே பெரு நோயாக இருப்பது நீண்டநேர உறக்கமாகும். வாசி யோகத்தின் பெருமையைத் தத்துவங்கள் வழி அறிவதன் மூலம் அதீத உறக்கத்தின் தீமையை உணரலாம்.
- ஆறு தத்துவப் பள்ளிகளில் நான்கு நாத்திகப் போக்குடையவை. இவற்றுள் இரண்டுதான் ஆத்திக நம்பிக்கையுடையவை. இவ்வாறிருந்தும் நம் நாடு ஆன்மிகத்தில் சிறந்த நாடாகவும், தமிழ் மொழி பக்தியின் மொழியாகவும் விளங்குவது போற்றுதலுக்கும் பெருமைக்குரியதாகும்.
- பல சீடா்களால் குருவாகப் போற்றப்பட்டு உயா்ந்த தருணத்திலும் தமது மூத்த குருவினை வணங்கும் நன்னெறியினைத் திருமூலா், தாயுமானவரின் அனுபவங்களின் மூலம் கற்றுக் கொள்ளலலாம்.
- பிறருக்குச் செய்கின்ற தீமை பிறவிச் சுழற்சியைத் தரும் என்பது திருமூலரின் பாடல்களின் வாயிலாக அறிய முடிகின்றது.
- சிவனின் திருஅடையாளங்களைப் போற்றிப் பணிந்து அணிவதன் மூலம் ஆன்மிகத் தாகம் அகத்தே ஏற்பட்டு சிந்தை சீரடையும் என்பதை அறிய முடிகின்றது.
- மனிதன், சக மனிதனிடம் அகங்காரம் கெட்டு, ஆணவம் விட்டு வாழ வகை செய்வதே தத்துவமாகும். இவற்றைக் கற்பதற்கும் உணா்வதற்கும் மதமோ, சமயமோ தடையில்லை என்பதனைத் தத்துவங்கள் உணா்த்துகின்றன.

- அருளாளர்களும் தங்களின் வாழ்வினில் மாயை, ஆணவம், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் போன்ற தத்துவங்களிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள முடியாமல் வருந்தியதை திருமூலர், தாயுமானவரின் அருட்புலம்பலின் வழி அறிய முடிகின்றது.
- எண்ண அதிர்வுகள் இல்லாத மோன நிலையில் ஆறு ஆதாரங்களைக் கடக்கும் நிலை ஏற்படும்.
- தத்துவங்களை உரைப்பதற்கும் கேட்பதற்கும் அனுபவிப்பதற்கும் மானுடர்களுக்கு முப்பதாம் அகவையே ஏற்புடையது என்கின்றார் திருமூலர்.
- கரு உருவாகிய நாள் முதல் மானுடர்கள் இறக்கும் வரை தத்துவங்கள் தொடரும் பாங்குடையாதாகும்.
- யான், எனது எனும் சுயநலமும் செருக்கும் அகங்காரத் தத்துவத்தின் விளைவே என்பதை உணரும் தருணத்தில்தான் தன்னடக்கம் தோன்றும்.

பின்னிணைப்புகள்

இவ்விரு தத்துவ ஞானிகளிடையே ஒன்றுபடும் தத்துவக் கருத்துக்கள் அட்டவணைப்படுத்தி தரப்பட்டுள்ளன. மனிதன் என்ற நிலையிலிருந்து இறை என்ற நிலைக்கு உயர்ந்த இத்திருமகான்களின் கோயில்கள், மடங்கள், சமாதிகள் ஆகியவற்றின் புகைப்படங்கள் இடம்பெற்றுள்ளன.

பரிந்துரைகள்

1. உளவியல் நோக்கில் திருமந்திரமும் தாயுமானவர் பாடல்களும்
2. வைதிகத் தத்துவ நோக்கில் திருமூலரும் சிவஞான சித்தியாரும்
3. பெருநெறி ஒழுக்கங்களின் வழி தாயுமானவரும் வள்ளலாரும்